INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS
DOI:10.34256/irjt22231

# சமயம் சார் மானிடவியல் நோக்கில் தூர்வை நாவல்

**பொ. அகிலா** [அ, *]

[அ] தமிழ்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா

# Thoorvai novel from the point of view of religious anthropology

**P. Agila** [a, *]

[a] Department of Tamil, Erode Arts and Science College (Autonomous), Erode-638009, Tamil Nadu, India

* Corresponding Author: eascramalingam@gmail.com

Received: 24-01-2022
Revised: 06-04-2022
Accepted: 11-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

The role of the novel in modern Tamil literature is so great that it is possible to convey through the novel a lot of information which neither poetry nor a short story can speak of, because it is possible to write extensively in the form of a novel. Although the novel is valued as a gift of the shoe era, it can be regarded as doing a great job of recording the dynamics of Tamil society. From individual intelligence to society, caste, region, local history, the history of the struggle of the trade unions, the history of the Indian freedom struggle, the life records of the department, urbanization and the economic crises that result from it, etc., have been recorded. In this article, Dharman's novel Thoorvai is examined from the point of view of religious anthropology.

**Keywords:** Thoorvai, Tamil Society, Caste, Struggle

## முன்னுரை

தமிழ் நாடானது ஒரே மொழியின் கீழ் வரையறுக்கப்பட்டிருப்பினும் வெவ்வேறு நில அமைப்பும் பண்பாட்டுக் குணவியல்புகளும் கொண்டவையாகும். இந்தப் பின்னணியோடு தான் தமிழ் நாவல் இலக்கியத்தை அனுகவும் மதிப்பிடவும் முடியும் அவ்வகையில் கரிசல் வட்டாரம் மிக முக்கியமானவையாகும் செழுமையான படைப்புகளும் படைப்பாளிகளும் உருவான நிலமாகும். இதன் வழி சோ.தர்மனின் படைப்புகள் தனித்துவமான ஒன்று எனலாம். இதன் அடிப்படையில் தூர்வை நாவலில் சமயம் சார்ந்த மானிடவியல் சிந்தனைகளை விளக்கி ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## சமயத் தோற்றம்

சமயம் பற்றி மானிடவியல் அறிஞர்களிடம் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. ஒவ்வொருவரும் தாம் மேற்கண்ட கோட்பாடுகளின் அடிப்படையிவ் சமயத்தை விளக்க முயன்றுள்ளனர். “மனுடவியல் அறிஞர் எமில் துர்க்கைம் நுஅயடைந ஹுரசமாநiஅ என்பார் ‘சமயம் என்பது சமூகம் சார்ந்த ஒரு நிறுவனமாகும். மக்கள் தங்களுக்குரிய நம்பிக்கைகளையும் நடத்தை முறைகளையும் வழிபாட்டு முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு சமயங்களைக் கட்டமைக்கின்றனர் என்பர். எட்வர்ட்பர்னட் டைலர் ஜேம்ஸ் ஜார்ஜ் பிரேசர் போன்ற மானிடவியலாளர்கள் சமயத்தை ‘மனித மனத்தைச் சார்ந்தது என்று விளக்குகின்றனர். இராபர்ட் லோவி மலினா விஸ்கி சிக்ம்ண்ட் பிராய்டு, விக்டர் டார்னர் கிளிப்போர்டு கீர்ட்ஸ் ராட்கிளிப் பிரவுன் போன்றோரும் சமயத்தைச் சமூகம் சார்ந்தது என்று விளக்குகின்றனர் (Bhakthavachala Bharathi, 2021).

இன்று சமயம் என்று நாம் கருதும் கருத்தமைப்பு ஒரு நிறுவனமாகும். அந்நிறுவனம் புனிதச் சடங்குகளை ஒருங்கிணைத்து அதற்கு ஒரு தெய்வத்தைப்படைத்து அந்நிறுவனத்தைச் சார்ந்த மக்கள் கூட்டம் தமக்கெனச் சில வழிபாட்டுச் முறைகளையும் நடத்தை முறைகளையும் வகுத்துக்கொண்டு அது வகுத்துக் கொண்ட நெறிமுறைகளுக்கு இசைவாக நடந்து கொள்வதாகும். அதன் நடத்தை விதிகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட்ட வேண்டியவை அவ்விதிகளை மீறி நடப்பவர்கள் அச்சமயக் குழுவிலிருந்து விலக்கப் பெறுகின்றனர் அல்லது தள்ளி வைக்கப் பெறுகின்றனர். இந்நிறுவனத்தை தோற்றுவித்து அதற்கு தலைமை தாங்குபவராக வழி நடத்துபவராக வரலாற்றில் வாழ்ந்த ஒருவர் அமைகின்றனர். யூதம் கிறித்துவம், இஸ்லாம், பௌத்தம், சமணம், போன்ற சமயங்கள் அச்சமயங்களைத் தோற்றுவித்த வரலாற்று மனிதரை நமக்குத் தெரிவிக்கின்றன. இச்சமயங்களைத் ஒரே ஒருவரை கடவுளாக் கொண்டு ஏகத்துவத்தை வற்புறுத்துகின்றன.

இந்து சமயம் என்று நாம் கொண்டுள்ள கருத்தமைப்பு இதற்கு மாறானதாகும். உண்மையில் இது ஒரு சமயம் அன்று மாறாக. இது சில வாழ்வியல் நடத்தைகளின் தொகுப்பு ஆகும். யூத மதம், கிறித்தவமதம், இஸ்லாமிய மதம் போன்றவை வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த ஒருவரால் நிறுவப்பட்ட சமயம் நிறுவனங்களாகும். ஆனால் இந்து, சமயம் அதாவது அது என்று தோன்றியது அதனைத் தோற்றுவித்தவர் யார்? போன்றவற்றை விளக்க இயலாத வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரியதாக அது கருதப்படுகின்றது அது காலந்தோறும் காலத்தின் தேவைக்கேற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வந்துள்ளதால் இதனைப் பல கடவுட் கோட்பாட்டுச்சமயம் என்பர் இவ்விரண்டுமே இயல் உலகிற்கு அப்பாற்பட்ட பொருள்களை ஆராய்கின்றன. அதாவது உலகில் காணப்படும் பொருள்களுக்கும் கடவுளுக்கும் உள்ள உறவுகள் யாவை? தோன்றிய பொருள்கள் எல்லாம் அழிந்து கொண்டிருக்கின்றன என்றால் அவை எங்கே போய்ச் சேர்கின்றன? அவை மீண்டும் பிறக்கின்றனவா? முதலிய வினாக்களை ஆராய்வது சமயம் ஆகும் சொர்க்கம், நகரம், பாவம், புண்ணியம் போன்ற கருத்தாக்கங்களும் சமயம் என்னும் சொல்லுக்குள் புதைந்துள்ளன.

‘தொல்சமயம்’ என்பது இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும் உண்மையில் அதனைச் சமயம் என்று கூறுவதே பிழையாகும் நாம் ஆதிச் சமயம் மக்களின் நடத்தை முறைகளை விளக்குவதற்காகவே தொன்மையோடு சமயத்தையும் சேர்த்துத் ‘தொல்சமயம்’ என்கிறோம். உண்மையில் புராதன மக்களின் மறு உலகம் பற்றிய நம்பிக்கையோ கோட்பாடோ இருந்தாகத் தெரியவில்லை. அறிவு வளர்ச்சி குன்றியிருந்த நிலையில் அவர்கள் இயற்கையில் காணும் ஒவ்வொரு பொருளும் தம்மைப்போல் உயிர்பாற்றலைப் பெற்றிருப்பதாகக் கருதினர். அவ்வுயிர்ப் பாற்றலைத் தம் வசப்படுத்திக் கொண்டு தம் வாழ்க்கையை வளமுறச் செய்வதற்காகப் பல நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டனர். அவர்கள் மேற் கொண்ட அந்நடவடிக்கைகளையே நாம் தொல்சமயம் என்று வரையறுத்தக் கூறுகின்றோம்.

## கண்மாய் காத்த காவல் தெய்வம் அய்யனார்

நம்மை காத்து வருகின்ற தெய்வம் காவல் தெய்வம் காவல் தெய்வங்கள் ஊர் எல்லையில் அல்லது ஏதேனும் ஒரு வயல் மேட்டில் கண்மாய்கரையில் அமைந்திருக்கும் காவல் தெய்வத்தை எல்லைக் கடவுள் என்று சொல்வது உண்டு.

காவல் தெய்வங்கள் என்றாலே பெரிய மீசை வைத்து கொண்டு அரிவாள் தூக்கி கொண்டு குதிரை, நாய், போன்ற வாகனங்களை வைத்துக் கொண்டிருக்கின்ற தெய்வங்கள் தான் நம் நினைவுக்கு வரும். ஒரு கிராமத்திற்குள் நோய்கள், திருடர்கள், பஞ்சம், பெருவெள்ளம் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படாத வண்ணம் எல்லையிலேயே தடுக்கும் தெய்வம் காவல் தெய்வமாகும் சோ.தர்மன் தூர்வை புதினத்தில் காவல் தெய்வமாக விளங்கும் அய்யனார் அகப்பனை தெய்வமாக வணங்கி வருவதை, “கம்மாக்கரை அய்யனார் நேரிலே வந்து கரை உடையாமல் நான் பாத்துக்கிறேன் ஊருக்குள் போய் ஆட்களைத் திரட்டிக் கொண்டுவா அதுவரை கரை உடையது அதுக்கு நானாச்சி என்று சொல்லி நீர்ப்பாசிக் கருப்பசாமியை ஊருக்குள் அனுப்புகிறார். கம்மா என்னென்னைக்குமே ஒடையமது அய்யனாரப்பன் காத்திடும் என்பதையும் கண்மாய் பெரு வெள்ளம் வந்தாலும் அந்தக் கண்மாய்க்

கரையை உடையாமல் காத்து நிற்கும் அய்யனாரப்பனை உருளைக்குடி கிராம மக்கள் வழிபடுவதை தூர்வை புதினத்தின் மூலம் படைப்பாளர் உணர்த்தியுள்ளார் (Dharman, 2017).

## சமாதி வழிபாடு (முன்னோர் வழிபாடு)

இறந்தோரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும்பங்கு வகிக்கிறது என்றும் கருத்தக்கதால் ஏற்பட்டதே முன்னோர் வழிபாடாகும் இறந்த மூதாதையரின் ஆற்றலும் அனுபவமுன் வாழ்வோரைச் செம்மைப்படும் என்ற நம்பிக்கையில் மூதாதையர்களை வழிபடுகின்றனர் இறந்தோரின் ஆசி என்றென்றும் வாழ்வோருக்கு கிடைக்க வேண்டும் என முன்னோர்களை வழிபடுகின்றனர். இறந்தோரின் விருப்பங்களையும் அவருக்கு பிடித்தமானவற்றையில் நிறைவேற்றி அவரைவழிபடுதல் மூலம் தீய ஆற்றல்களிலிருந்து முன்னோர்கள் தப்ப வைப்பார்கள் என்றும் அவர்கள் சினம் கொள்ளாமல் அருள்குணத்துடன் ஆதரிப்பர் என்றும் நம்பி முன்னோருக்கு வழிபாடு செய்கின்றனர்.

இதனை, சோ.தர்மன் தூர்வை புதினத்தில் "பெரியபிள்ளை சமாதியில் பலபேர் பொங்கல் வைப்பார்கள், பயறு, சோளம், கடலை கொழுக்கட்டை அவித்துப் படைப்பார்கள், எலிகள் வரக்கூடாது, வெள்ளாமையைப் பூச்சிகள் நாசப்படுத்தக்கூடாது, வண்டுகள் விழக்கூடாது, வெள்ளாமை நல்லபடியாய் விளை வேண்டும் என்ற நோமிக்கம் போடுவார்கள் பொபங்கல்வைத்து காணிக்கை போடுவார்கள்" முன்னோர் வழிபாடுகள் இன்றைக்கும் பழமை மாறாமல் சமயப்பண்பாட்டின் தொடர்ச்சி நிலையை படைப்பாளர் தம் புதினத்தின் வழி வெளிப்படுத்தியுள்ளதை அறியலாம் (Dharman, 2017)..

## காளியமமன் திருவிழாவும் நிகழ்த்து கலைகளும்

சமய விழாக்களின் போது இறைவனை வழிபட்டு அருள்பெறுவதே தமிழ்மக்களின் உள்ளாந்த விருப்பமாகும், கிராமங்கள் தன்னிறைவு பெற்றவை தற்சார்பு பெற்றவை எனும் கருத்து மீது சில விமர்சனங்கள் இருந்தாலும் இத்தன்மைகளை முன்னிறுத்திப் பார்க்கும் போது மரபான கிராமிய வாழ்வில் திருவிழா என்றாலே அது ஊர்த்திருவிழா என்றே பொருள் பெறும் அதிலும் கோயிலை மையமிட்ட விழாவாக அது அமைவதால் அது கோயில் திருவிழா என்று பெயர்கிறது இது பெரும்பாலான கிராமங்களில் ஆண்டுதோறும் நடைபெறுவதால் ஆண்டுத் திருவிழா என்னும் பொருண்மையும் பெறுகிறது.

தமிழர் வாழ்வில் கிராமமே பாரம்பரிய வாழ்விடம் என்பதால் கிராமத்திருவிழாக்கள் பற்றிய புரிதல் இங்கு இன்றியமையாததாகிறது. மரபார்ந்த கிராமக் கோயில்கள் யாவும் தாயத் தெய்வக் கோயில்களாகும் அதிலும் காளியும், மாரியம்மனும் முதன்மையான தெய்வங்களாகும். இதனை,

வைகாசி மாசம் காளியம்மன் கோயில் பொங்கல் பிரமாதமாய் நடக்கும் அநேக ஊர்ப்பொங்கல்கள் சித்திரையிலேயே முடிந்துவிடும், கடேசி வைகாசி பொங்கல் ஆகையால் கூட்டம் அலை போதும். மூன்று நாளும் கிராமமே திக்கு முக்காட்டிப் போகும். கவுரு குத்து, அக்னிசட்டி, கிடாய்வெட்டு, அரிவாள் ஏற்றம் என்று நாலா ஊர்ச்சனமும் நிறைந்துகிடக்கம்" திருவிழா அன்று "மாங்கான் நரிகுறத்திவேஷம் சிறுசுகள் பூராவும் கையில் வேப்பிலைகளைக் கொத்தாய் வைத்துக்கொண்டு ஆட்டம் போடும். அவர்கள் தலையில் ஓலைக் கொட்டான்களைக் கவுத்தி அதில் கோழி உரோமங்களை நிறைய சொருகியிருப்பார்கள் ஆட்டம் போட்டுப்பாடுவார்கள் (Dharman, 2017).

"ஆகோ அய்யகோ

கம்புக்குத்து கவுருகுத்து"

ஆகோ அப்பயாகோ சமயம் சார்ந்த விழாக்களில் நாட்டார் நிகழ்த்துகலைகளை கிராமிய மண்ணின் மனம் மாறாமல் படைப்பாசிரியர் பதிவு செய்கிறார் (Dharman, 2017).

## தேரோட்டத் திருவிழா

தேரோட்டம் என்பது, பலமதங்களிலும் பல தெய்வங்களின் சிலையையோ சின்னங்களையோ இதற்காக உருவாக்கப்பட்ட தேரில் வைத்துப்பலர் சேர்ந்து ஊர்வலமாக இழுத்துவரும் ஒரு விழாவாகும் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி செண்பகவல்லியம்மன் கோயில் திர்த்தவிழா ஆண்டுத் திருவிழாக்களில் மிகமுக்கியமான திருவிழாவாக இது அமைகிறது என்பதை "சித்திரை ஒன்னாந்தேதி கோயில்பட்டி செண்பகவல்லியம்மன் கோயில் தீர்த்தத் திருவிழா பிரசித்தம். இரண்டு தேர் ஓடும் விடிய விடிய வேடிக்கைகள் நடக்கும், சிலம்பாட்டம், ஒயில் கும்மியாட்டம், கரகாட்டம், வில்லுப்பாட்டு, நாடகம் விடிய விடிய கூட்டம் அலைமோதும், சுற்று கிராமம் பூராவும் கூடார வண்டிகள் கட்டிப்போவார்கள், கோயில் மைதானம் களைகட்டிவிட்டது இரண்டு தேர்களும் ஜோடித்து புதுப்பெண்ணாய் நிற்கின்றன வடம் பிடிக்ககூட்டம் முண்டியடிக்கிறது. பக்கத்து ஊரான மூப்பன் பட்டிக்காரர்கள் வந்துதான் தடி போட வேண்டும். அதுவரை தேர் நிலையிலேயே நிற்கும். மேளதாளத்துடன் குடைநிழலில் மாலையோடு அழைத்து வருவார்கள். பூரணகும்பமரியாதை அவர்களுக்கு மேளச்சத்தம் கேட்கிறது ஒவ்வொருவர் கழுத்திலும் மாலையும் மணிக்கையில் பூச்சுற்றலுமாக எளவட்டமார்கள் மாப்பிள்ளைகளாய் வருகிறார்கள். அவர்கள் வந்துவிட்டதற்கு அடையாளமாகக் கொட்டு சத்தம் பலமாய்க் கேட்கிறது. அவர்கள் உத்திரம் போன்ற கனத்த தடியைத் தூக்கி ஓடிவந்து தேர்க்காலில் டங்டங்கென்ற சத்தத்துடன் ஊன்றி தேர் அசைகிறது. தும்பிக்கைகளாய்த் தொங்கும் அலங்கார மாலைகள் ஆடுகின்றன. கூட்டம் கையெடுத்து கும்பிட்டு வடம் பிடிக்கிறது தாயே, சென்பக வல்லிதாயே, தாயே அம்மா, தாயே தேர் அசைந்து அசைந்து நிலையைவிட்டு நகர்கிறது (Dharman, 2017). சமயம் சார்ந்த விழாக்களில் சமூக உறவுகள் மேம்படுத்தப் பட்டு பக்குவப்படுத்தப்படுகிறது. என்பதை சோ.தர்மன் தனது தூர்வை புதினத்தின் வழி அறியமுடிகிறது.

## கார்த்திகை தீபவிழா

கார்த்திகை மாதம் முழுநிலா நாளன்று கார்த்திகை தீபம் நடைபெறும் வீடுகள் தோறும் விளக்கேற்றி அலங்கரிப்பர் கார்த்திகை மாதம் முழுவதும் விளக்கு ஏற்றுபவர்களும் உண்டு "துபாய்ஸ் என்பவர் கார்த்திகைத் தீபத்தைத் தீப ஒளிஎன்றும் கார்த்திகை மாதத்தில் நடைபெறும் என்றும் நெருப்புக்கு உரியது என்றும் உழவுத் தொழிலின் பாற்பட்டது என்றும் கூறுகிறார்" வில்லியம் குருக் அவர்கள் ஹோலியும் தீபாவளியையும் நெருப்புக்கும் விளக்குக்கும் மதிப்பு அளிக்'கும் தலை சிறந்த கொண்டாட்டங்கள் என்று குறிப்பிடுகிறார் (Bhakthavachala Bharathi, 2014). "தூர்வை நாவலில் எல்லாக் கோயில்களுக்கும் தீப வெளிச்சத்தில் பிரகாசிக்கும் சிறிய அழகான கிளியஞ் சட்டிகளில் எண்ணெய் ஊற்றி திரிபோட்டு குமரிகள் கோயில் கோயிலாய் தீப மேற்றுவார்கள் வாசற்படியிலும் மாடக்குழிகளிலும் தீபம் பிரகாசிக்கும்.

சொக்கப்பனைக் கொழுந்துவிட்டு எரிந்து சாம்பலாய்க் களத்தில் படியும் அந்த சாம்பலை ஊரோடு போட்டிபோட்டு அள்ளி பெட்டிகளில் சேமிப்பார்கள் அந்தச் சாம்பலை வெள்ளாமைகளில் தூவினால் நல்ல மகசூல்கிடைக்கும் (என்ற நம்பிக்கையும் உருனாக்குடி மக்களிடம் இன்றளவும் காணப்படுவதை ஆசிரியர் பதிவு செய்திருப்பதை அறியமுடிகிறது (Dharman, 2017).

## ஆவி வழிபாடு

"ஆவியுலக வழிபாட்டைப்பற்றி டைலர் சமயத்தின் தொடக்கம் ஆவிகளின்பாற் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது என்கிறார், ஆதி மனிதன் ஆவியின் சீற்றத்தைத் தணிக்க ஆவியை வழிபாடுசெய்ய ஆரம்பித்தான். ஆவிகள் தான் அவர்களது செயலைக் கட்டுப்படுத்துவதாக ஆதிமனிதன் நம்பினான் முன்னோரது ஆவியை வழிபட ஆரம்பித்தனர்"3 இதனை தூர்வை நாவலில் "எங்க சின்னச் சிறுக்கி நாளு நாளா ஒரு வடியா இருந்தா இன்னக்கி பல்லக கெட்டிக் கிருச்சு பெலமாசிரிக்கா, நாக்க துரத்துறா மட்டைய மடிச்சு கடிக்கா, பார்வ ஒன்னும் சரியில்லை, மொகம் பூராவும் கருப்பாதெரியுது கருப்புக்கோளாறு மாதிரி இருக்கா.

வன்னிமடைக்குப் போயிராக்கன கூட்டியாரன் அதாவது எங்க வீட்டு சின்ன சிறுக்கி நாளு நாளாக ஒரு மாதிரியா இருக்க அதனால்தான் சொல்றேன் வன்னிமடைராக்கனை கூட்டியாந்தா இந்த பொன்னு சரியாகி விடுவா என்றார்” (Dharman, 2017).

## பாவனைச் சடங்கு

“பாவனை மெய்ப்பாடுகள் அல்லது தன்னறிவுடன் கூடிய போலச் செய்தல் குரங்கு மூதாதையர்களிடமிருந்து பெற்றகுணாம் சமாகும்” என்கிறார் ஜார்ஜ் தாம்சன், பாவனை மெய்ப்பாடு என்பத எல்லாவிலங்குகளிடமும் காணப்படுகிறது தாய்ப்பறவை பறப்பதைப் போலக்குஞ்சும் பாவனை செய்து பறக்கக்கற்றுக் கொள்கிறது. இவ்வாறு போலச் செய்தல் மூலமாக ஒரு விலங்கு மற்ற விலங்குகளிடமிருந்து பல பழக்கங்களைக் கற்றுக் கொள்கிறது. விலங்குகளிடம் காணப்படும் இத்தகைய பாவனை மெய்பபாடேபுராதன இனக்குழு மக்களிடமும் காணப்பட்டது இயற்கை ஆற்றல்களான மழை, நீர், தீ, காற்று ஆகிய வற்றைப் போலச் செய்வதின் மூலமாக அல்லது பாவனை செய்வதின் மூலமாக அவற்றைக் கட்டுப்படுத்தலாம் என இனக்குழு மக்கள் என்னினர், மழை இல்லாத காலங்களில் மழையை வருவிப்பதற்கும், மழை அதிகமாகப் பொழிந்து வெள்ளத்தால் தீங்கு நேரிடும் காலங்களில் மழையை நிறுத்துவதற்கும் அவர்கள் சில பாவனைச் செயல்களை செய்தனர் மழை பெய்யும் போது உருவாகின்ற இயற்கை நிகழ்வுகளான இடி மின்னல் ஆகியவற்றைப் போலப் பாவனை செய்தால் மழை பெய்யும் என நம்பினர் இதன் வழியே தூர்வை நாவலில் மழை பெய்வதற்காக மழக்கஞ்சி எடுத்து மழை வருவதற்கு சில பாவனைச் சடங்குகளை செய்கின்றனர் இதனை,

“மழயுமில்ல தண்ணியுமில்ல

மழக்கஞ்சியே மழக்கஞ்சி

ஆடு மாடுக்கு தண்ணியில்ல

அம்மங்கஞ்சியே அம்மங்கஞ்சி”

அவர்கள் எல்லோரும் பெரிய பெரிய வாளிகளிலும் சட்டிகளிலும் வீடுவீடாய்ப் போய்கஞ்சி வாங்கினார்கள்.

சோளக்கஞ்சி, வரகுச் சோறு, அவித்த நெல்லுச்சோறு, குருதவாலிச்சோறு, சாமைச்சோறு, கேப்பைக்களி, கேப்பைக் கூழ், பச்சை நெல்சோறு, கம்மங்கஞ்சி, தினைக்கஞ்சி, நாத்துச் சோளச்சோறு என்று பலவகையான சோறுகள் சட்டிகளில் நிறைந்தன, சில வீடுகளில் வெங்காயமும், பச்சை மிளகாயும், துவையலும், ஊறுகாயும் கூடக் கொடுத்தார்கள் எல்லாவற்றையம் வாங்கி மொத்தம் சேர்த்து சுமந்துகொண்டு காட்டுவழியே ரொம்பதூரம் நடந்தாhகள், கஞ்சியைக் குடித்து முடித்தவுடன் பழைய பிஞ்சு செருப்புக்களாலும், பிஞ்சு சுளகாலும் அவர்களை அடித்துவிரட்டினார்கள், சுடு மண்ணில் அவர்களைக் கீழே தள்ளிப் புரட்டினார்கள். அவர்கள் கட்டாயம் அழவேண்டும், அவர்களின் கண்களில் இருந்து ஒரு சொட்டு வர்ண பகவான் மனமிரங்குவான்” மழை வருவதற்கான பாவனைச் சடங்கினை உருளைக் குடிமக்கள் இன்றளவும் கடைப்பிடிக்கின்றனர் என்பதை தூர்வை நாவலின் மூலம் அறியலாம் (Dharman, 2017).

## தொத்து மந்திரச்சடங்கு

“பூசாரிகள் அல்லது மந்திரவாதிகள் மூலம் செய்யப்படுகின்ற சில தொத்து மந்திரச் சடங்குகளையும் இன்றைய நாட்டுப்புற மக்களிடம் காணலாம் மந்திவாதிகள் மூலம் செய்கின்ற செய்வினை, செய்தல், பில்லி சூனியம் வைத்தல் பேயோட்டுதல் ஆகிய சடங்குகள் யாவும் தொத்து மந்திரச் சடங்குத்தன்மை பெற்றவையாகும்” இதனை தூர்வை நாவலில் பெரியபிள்ளை வண்டிப்பாதையில் புழுதி மண்ணைக் குனிந்து எடுத்து உள்ளங்கையால் வைத்து பூ என்று ஊதி விட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்தார் மறுநாள்காலையில் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கப் போன நாராயணன் திடுக்கிட்டுப் போனான் ஒவ்வொரு பூசணிக்காயின் மேலேயும் அஞ்சாறு எலிகள் ஏறி உட்கார்ந்து

கொண்டு குடைந்து குடைந்து ஓட்டைப் போட்டுக்கொண்டிருந்தன நாராயணன் சூ.சூ என்று விரட்டியும் பயந்து ஓடவில்லை. போவது போல் போக்குக் காட்டிவிட்டு மீண்டும் வந்து காய்களின் மேலே ஏறிக்கொண்டன, நாராணயன் நேர பெரியபிள்ளையை பார்க்கிறான்.

“கும்புடுறஞ்சாமியோவ்,

யாரு நாராயணனா என்னாடா காலங்காத்தால

சாமி தோட்டம் பூரவும் எலி கூட்டங் கூட்டமாக”

மனுசர் கேட்டா நிய் தரமாட்ட, எலிக கேட்டா குடுப்பயக்கும் சரி இப்ப நான் என்ன செய்யனும், பட்டமரமாய் நாராயணன் தரையில்விழுந்து கும்பிட்டான்.

இந்தா இந்தத் திருநீத்தப் பிடி கைய இறுக்கிப் பொத்திக்கோ, தோட்டத்துல போய்தான் கைய திறக்கனும் எந்தப் பக்கமாவது ஒரு தெசையவிட்டுட்டு மூனு தெசையிலயும் திருநீத்தப் போட்ரு, போடும் போது பெரியபிள்ள பெரிய பிள்ள பெரியபிள்ளனு சொல்லிக்கிட்டே போடனும். திருநீறு போடாத தீசையை நோக்கி எலிகள் கூட்டம் கூட்டமாய் வெளியேறிப்போவதை நாராயணன் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே நின்றான்” (Dharman, 2017).

## முடிவுரை

சமயம் என்பது புனிதமான ஒன்றைப்பற்றியும் நம்பிக்கைகளும், செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறை என்று மானிடவியலார் கூறிய கருத்தின் வழி தூர்வை நாவலில் கண்மாய் காத்த அய்யனாராப்பனை வழிபடுவதையும், சமாதிவழி பாடான அதாவது முன்னோர் வழிபாடானது, உருளைக்குடி கிராம மக்கள் பெரியபிள்ளை சமாதியை இன்றளவும் வழிபட்டு வருவதையும், ஆவி வழிபாடாக பேய் பிசாசு போன்ற தீய சக்திகளை விரட்டும் மந்திரவாதியாக வன்னிமடை ராக்களின திருநீறும், காளிம்மன் திருவிழாவில் சமயம் சார்ந்த பல நிகழ்த்துகலை வடிவங்களையும் தேரோட்டத்திருவிழாவும் கார்த்திகை தீபத்திருவிழாவை மக்கள் மகிழ்ச்சியும் மழையை நிறுத்துவதற்க்கான சில சடங்குகள் வாழ்வில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதையும், விவசாயம் செழிக்கவும் எலி, பூச்சிகள் அண்டாமல் இருப்பதற்கு சில தொத்து மந்திரச் சடங்கினை மேற்கொண்டு வருவதனையும் சோ.தர்மன் தூர்வை நாவலில் சமயம் சார்ந்த சிந்தனைகள் நிறைந்து கிடப்பதை மேற்க்கண்ட ஆய்வின் வழி உணர்ந்துகொள்ள முடிகிறது.

## References


Bhakthavachala Bharathi, (2014) Ilakkiya Maanidaviyal, Adayalam Publication, Trichy, India

Bhakthavachala Bharathi, (2021) Panpaattu Maanidaviyal, Adayalam Publication, Trichy, India

Dharman, S. (2017) Thoorvai, Adayalam Publication, Trichy, India



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License